தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994, மே 2, திங்கட்கிழமை
சித்திரை 19, பவ, திருவள்ளுவர் ஆண்டு–2025.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள."

தான் வறுமையில் இருந்தாலும், இல்லை என்னும் கொடுமை தரும் சொல்லைக் கூறாது, நாடி வருவோர்க்கு, ஈதல் என்பது, உயர்ந்த குடியைச் சார்ந்தவரிடம் இயல்பாகவே அமைந்த குணம் ஆகும்.

முன்னவர் அவர்கள், இன்றைக்கு இல்லை என்று சொல்ல மாட்டார்கள். (சிரிப்பு)

1. வினாக்கள்-விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள், வினா எண் 461, டாக்டர் க. கோபால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

461—

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நவீன கருவிகள் வழங்குதல்.

*** 21835—டாக்டர் க. கோபால்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1994 மே 2

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதய நோய் பிரிவில் (Echo Cardiogram and Colour Doppler) போன்ற நவீன கருவிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இக்கருவிகளை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : எக்கோ கார்டியோகிராம் மற்றும் கலர் டாப்லர் கருவிகள் வாங்குவது தற்போதைக்கு சாத்தியமில்லை.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மருத்துவக் கல்லூரியானது, தமிழகத்தினுடைய மையப் பகுதியிலே இருக்கிற காரணத்தால் அந்தக் கல்லூரியைச் சுற்றி, தஞ்சாவூர் மாவட்டம், நாகை-காயிதேமில்லத் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள நோயாளிகள் எல்லாம், அந்தப் பகுதிக்கு சிகிச்சைக்காக வருகிற சூழ்நிலை இருக்கிறது. அதேபோல், தற்போது 'ஹைப்பர் டென்ஷன்', 'ஹார்ட் அட்டாக்' போன்ற வியாதிகள் எல்லாம் அதிகப்படியாக இருக்கிற காரணத்தினால், அந்த நோய்களினால் பாதிக்கப்படுபவர்களை, அந்த மருத்துவக் கல்லூரிக்கு எடுத்துச் செல்கிறபோது, மிகவும் அபாயகரமான நிலையில், அந்த நோயாளிகளை, அவர்கள் சென்னையிலுள்ள மருத்துவக் கல்லூரிக்கு அனுப்புகிற சூழ்நிலை இருக்கிறது. சென்னையிலுள்ள மூன்று மருத்துவக் கல்லூரிகளிலும், 'பிளாக் அண்டு ஒயிட்' மற்றும் கலர் டாப்லர்கள் இருக்கிற காரணத்தினாலும், ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் இரண்டு விதமான கருவிகள் இருக்கிற காரணத்தினாலும், தற்போது வாங்குவதற்கு வசதி இல்லாவிட்டாலும்கூட, ஏதாவது ஒரு மருத்துவக் கல்லூரியிலிருந்து அந்த கலர் மற்றும் 'பிளாக் அண்டு ஒயிட்' டாப்லர்களை அனுப்புவதற்கு வாய்ப்பு இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக, விலையுயர்ந்த அந்தக் கருவிகளை ஒரு இடத்திலே பொருத்திவிட்டால், மீண்டும் அதை அங்கே இருந்து இடமாற்றம் செய்கிறபோது, அவற்றைச் சரியாகப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. அதனை மாற்றியமைப்பதற்குக்கூட, அந்தக் கருவியினுடைய விலை என்னவோ, அந்த அளவுக்கு அதை மாற்றி அங்கே கொண்டுபோய் பொருத்துவதற்கு 'சார்ஜ்' ஏற்படுகிற நிலைமைகள்

1994 மே 2]

எல்லாம் ஏற்படுகின்றன. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மற்றும் டெக்னீஷியன்களிடம் பேசிவிட்டு, முடியுமானால் அந்த நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், தற்போது தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற, புரட்சித் தலைவியினுடைய இந்த ஆட்சிக் காலத்திலேயே, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளோடு பேசி, அவசியமாக அந்தக் கருவிகளை அனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, அந்த மருத்துவக் கல்லூரியினுடைய இருதய நோய்ப்பிரிவு, அந்தக் கல்லூரியிலுள்ள கேன்டீனிலுள்ள பகுதியில்தான் தற்போது இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த தஞ்சை மருத்துவக் கல்லூரியிலுள்ள கேன்டீன் மிகச் சிறிய கேன்டீன். அதில் பாதியை அவர்கள் சுவராக வைத்துக் கொண்டு, பாதியை அந்த இருதய நோய்ச் சிகிச்சைப் பிரிவுக்காக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல, அந்த இருதய நோய்ப் பிரிவில், ஒரே ஒரு மருத்துவர்தான் தற்போது பணிபுரிந்து கொண்டிருக்கிறார். எனவே, அந்த இருதய நோய்ப் பிரிவின் சிகிச்சையை மேம்படுத்தும் நோக்கத்துடன், இருதய நோய்ப் பிரிவிற்குத் தனியாகக் கட்டிடம் கட்டிக் கொடுத்தும், அதிகப்படியான மருத்துவ நிபுணர்களை அங்கே போடும்படியும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-05*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கிற கட்டிடத்தில் தான் செயல்படுத்த முடியும். காரணம், இந்த ஆண்டு அதற்காக பணம் ஒதுக்கப்படவில்லை. எதிர்காலத்திலே அதைப்பற்றி ஆய்வு செய்யலாம். ஆனால் இருக்கின்ற கட்டிட வசதிக்குள்ளே எவ்வளவு சிறப்பாகச் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு செய்வதற்குரிய அந்தக் கல்லூரியினுடைய முதல்வர் அவர்களுக்கு இங்கிருந்து அறிவுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, மருத்துவர்களைப் பொறுத்தவரையில் ஒரு மருத்துவர் இப்பொழுது பணியாற்றுகிறார் என்று தெரிவித்தார். அதற்கு மேலே மருத்துவர்கள், அந்தத் துறையிலே பட்டம் பெற்றவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தேடிப்பிடித்து அங்கே கூடுதலாக பதவியை எற்படுத்த முடியாது என்றாலும் மாற்று வழியிலே, வேறு துறையிலேயிருந்து

[1994 மே 2

அந்தத் துறைக்கு அந்தப் பதவியை மாற்றி கொடுப்பதன் மூலமாகக் கூடுதலாக செயல்படுத்த முடியுமா என்பது பற்றி ஆய்வு செய்து அதற்குப் பின்னாலே முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக இந்த இருதய நோய் சிகிச்சைக்கான நவீன முறை கருவிகளை வழங்க முடியாவிட்டாலும், புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர், நாகை-காயிதேமில்லத் மாவட்டம் போன்ற நான்கு மாவட்டங்களுக்கும், இந்த நான்கு மாவட்டங்களிலுள்ள மருத்துவமனைகளிலும் இது இல்லாத காரணத்தினால், நவீன மருத்துவ கருவி பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ் கொடுத்தால் இந்த நான்கு மருத்துவமனைக்கும் தேவைப்படுகின்ற இடத்தில் இதைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு இருக்கும். எனவே, அதையாவது உடனடியாக வழங்குவதற்கு மறுபரிசீலனை செய்து ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக இருக்கின்ற ஆம்புலன்ஸிலே இது போன்று கருவிகளை நம்மால் பொருத்த முடியாது. முதல் உதவிக்காக என்று என்ன தேவையோ அதை மட்டும்தான் வைத்திருக்க முடியும். அதிலே கார்டியாலஜி என்று தனியாக எந்தக் கருவியையும் பொருத்தி வைப்பதில்லை. ஆனால், சமீபத்திலே நடந்த பார்ட் 2 ஸ்கீமிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கார்டியாக் வேன் என்று சிறப்பு ஆம்புலன்சை, 7 வண்டிகளை வாங்குவதற்கு அவர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வண்டியும் சுமாராக 10 இலட்சம் ரூபாய் வரும் என்று எதிர்பார்க்கிறோம். எனவே, அந்த வண்டிகளிலே இந்த இருதய நோய்க்கு முதல் உதவி கொடுத்து, வழியிலே அவர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டுவிடாமல் அவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே அடிப்படையாக என்னென்ன கருவிகள் தேவையோ, அந்தக் கருவிகளை, -- மிகப் பெரிய கருவிகளை அல்ல -- அடிப்படையாக முதல் உதவிக்கு, இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் உதவிக்கு என்னென்ன கருவிகள் தேவையோ அந்தக் கருவிகள் பொருத்திய வேன்களை வாங்கி ஆம்புலன்சைப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அப்படி வருகிறபோது தஞ்சாவூருக்கு அந்த வேன் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 462, திருமதி அ.தி.சரஸ்வதி; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.